செ.வெ.எண்: 21 நாள்: 09.11.2021

**செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி அமைக்கப்பட்டிருந்ததை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார்.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (08.11.2021) அன்று பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் மற்றும் ஒரு இலட்சம் புதிய இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்பு ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி அமைக்கப்பட்டிருந்ததை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைத்த புதிய திட்டங்கள் மற்றும் அரசு நலதிட்ட உதவிகள் வழங்கியது குறித்த புகைப்படங்கள் கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்தது. மேலும், தமிழ்நாடு அரசின் பல்வேறு சிறப்பு திட்டங்களான அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் கொரோனா நிவாரண உதவித்தொகை, மக்களை தேடி மருத்துவம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மலை கிராமங்களுக்கு 108 ஆம்புலன்ஸ் சேவை, இல்லம் தேடிக் கல்வி, கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் இலவச கொரோன மருத்துவ சிகிச்சை, திருமண நிதியுதவி திட்டம், இளம் வயது திருமண தடுப்பு குறித்த விழிப்புணர்வு, கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் புகைப்படங்கள் உள்ளிட்ட 80 -க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றிருந்தது. இப்புகைப்படக் கண்காட்சியை 500 -க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஒய்.பிரகாஷ் (ஓசூர்), திரு.டி.மதியழகன் (பர்கூர்), திரு.டி.ராமசந்திரன் (தளி), முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.**